# மே - 04 - வியாழன்

## புனித யூலியா

## “வாழ்வுதரும் உணவு நானே” (யோவா 6:48:)

## முதல் வாசகம் திருத்தூதர் பணி 8 : 26 – 40

பின்பு ஆண்டவரின் தூதர் பிலிப்பிடம், ”நீ எழுந்து எருசலேமிலிருந்து காசாவுக்குச் செல்லும் வழியாகத் தெற்கு நோக்கிப் போ” என்றார். அது ஒரு பாலைநிலப் பாதை. பிலிப்பு அவ்வாறே புறப்பட்டுப்போனார். அப்போது எத்தியோப்பிய அரச அலுவலர் ஒருவர் எருசலேம் சென்று, கடவுளை வணங்கி விட்டுத் திரும்பிச் சென்று கொண்டிருந்தார். அவர் ஓர் அலி எத்தியோப்பிய அரசியான கந்தகியின் நிதியமைச்சர். அவர் தமது தேரில் அமர்ந்து எசாயாவின் இறைவாக்கு நூலைப் படித்துக் கொண்டிருந்தார். தூய ஆவியார் பிலிப்பிடம், ”நீ அந்தத் தேரை நெருங்கிச் சென்று அதனோடு கூடவே போ” என்றார். பிலிப்பு ஓடிச் சென்று, அவர் எசாயாவின் இறைவாக்கு நூலை வாசிப்பதைக் கேட்டு, ”நீர் வாசிப்பதின் பொருள் உமக்குத் தெரிகின்றதா?” என்று கேட்டார். அதற்கு அவர், ”யாராவது விளக்கிக்காட்டாவிட்டால் எவ்வாறு என்னால் தெரிந்துகொள்ள முடியும்?” என்று கூறித்தேரில் ஏறித் தன்னோடு அமருமாறு பிலிப்பை அழைத்தார். அவர் வாசித்துக்கொண்டிருந்த மறைநூல் பகுதி பின்வருமாறு ”அடிப்பதற்கு இழுத்துச்செல்லப்பட்ட ஆட்டுக்குட்டிபோலும், உரோமம் கத்தரிப்போன் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர்தம் வாயைத் திறவாதிருந்தார். தாழ்வுற்ற நிலையில் அவருக்கு நீதி வழங்கப்படவில்லை. அவருடைய தலைமுறையைப் பற்றி எடுத்துரைப்பவன் யார்? ஏனெனில் அவருடைய உயிர்தான் எடுக்கப்பட்டுவிட்டதே!” அவர் பிலிப்பிடம், ”இறைவாக்கினர் யாரைக்குறித்து இதைக் கூறுகிறார்?தம்மைக் குறித்தா, அல்லது மற்றொருவரைக் குறித்தா? தயவுசெய்து கூறுவீரா?” என்று கேட்டார். அப்போது பிலிப்பு, இந்த மறைநூல் பகுதியிலிருந்து தொடங்கி, இயேசுவைப்பற்றிய நற்செய்தியை அவருக்கு அறிவித்தார். அவர்கள் போய்க் கொண்டிருந்தபோது வழியில் தண்ணீர் இருந்த ஓர் இடத்துக்கு வந்தார்கள். அப்போது அவர், ”இதோ, தண்ணீர் உள்ளதே, நான் திருமுழுக்குப்பெற ஏதாவது தடை உண்டா?” என்று கேட்டார். ”அதற்குப் பிலிப்பு, ”நீர் முழு உள்ளத்தோடு நம்பினால் தடையில்லை” என்றார். உடனே அவர், ”இயேசு கிறிஸ்து இறைமகன் என்று நம்புகிறேன்” என்றார். உடனே அமைச்சர் தேரை நிறுத்தக்கூறினார். பிலிப்பு, அமைச்சர் ஆகிய இருவரும் தண்ணீருக்குள் இறங்கினர். பிலிப்பு அவருக்குத் திருமுழுக்குக் கொடுத்தார். அவர்கள் தண்ணீரிலிருந்து வெளியேறினவுடனையே ஆண்டவரின் ஆவியார் பிலிப்புவை எடுத்துச் சென்றுவிட்டார். அமைச்சர் அதன்பின் அவரைக் காணவில்லை அவர் மகிழச்சியோடு தம் வழியே சென்றார். பின்பு பிலிப்பு ஆசோத்து என்னும் இடத்தில் காணப்பட்டார். செசரியா போய்ச் சேரும்வரை அவர் சென்ற நகரங்களிலெல்லாம் நற்செய்தியை அறிவித்தார்.

**பதில்பாடல்:** அனைத்துலகோரே கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்

## நற்செய்தி : யோவான் 6 : 44 – 51

அக்காலத்தில் இயேசு யூதர்களைப் பார்த்துக் கூறியது: ”உங்களிடையே முணுமுணுக்க வேண்டாம். என்னை அனுப்பிய தந்தை ஈர்த்தாலொழிய எவரும் என்னிடம் வர இயலாது. என்னிடம் வருபவரை நானும் இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன். ”கடவுள்தாமே அனைவருக்கும் கற்றுத்தருவார்“ என இறைவாக்கு நூல்களில் எழுதியுள்ளது. தந்தைக்குச் செவிசாய்ந்து அவரிடமிருந்து கற்றுக்கொண்ட அனைவரும் என்னிடம் வருவர். கடவுள்தாமே கற்றுத்தருவார் என்பதிலிருந்து தந்தையை எவராவது கண்டுள்ளார் என்று பொருள் கொள்ளக்கூடாது. கடவுளிடமிருந்து வந்துள்ளவர் மட்டுமே கடவுளைக் கண்டுள்ளார். உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்னை நம்புவோர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர். வாழ்வுதரும் உணவு நானே. உங்கள் முன்னோர் பாலைநிலத்தில் மன்னாவை உண்டபோதிலும் இறந்தனர். உண்பவரை இறவாமல் இருக்கச் செய்யும் உணவு விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த இந்த உணவே. ”விண்ணகத் திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற் காகவே கொடுக்கிறேன்‘” என்றார்.

**தியானம்:** தாகத்திற்கு தண்ணீர் அருந்தாமலும், உணவு உண்ணாமலும் எம்மால் நெடு நாள் வாழ முடியாது. அவை நாம் உயிர் வாழ மிக மிக முக்கியமானது. ஆனால் நமது ஆன்மீக வாழ்விற்கு இறைவன் தரும் வார்த்தை என்னும் உணவை நாம் உட்கொள்ள வேண்டும் என்பதனை இன்றைய வாசகங்கள் எமக்கு எடுத்துக் கூறுகின்றன. கடவுளின் வார்த்தையை நாம் எவ்வாறு உண்ண முடியும்? இறை வார்த்தையை படிப்பதன் மூலம், கேட்பதன் மூலம், அதன்படி வாழ்வதன் மூலம் நாம் உண்ணமுடியும், சுவைக்க முடியும். முதல் வாசகத்தில் கூறப்பட்டது போல், அந்த அமைச்சர் இறை வார்த்தையை ஆர்வமாக வாசிக்கின்றார். ஆனால் அதன் அர்த்தம் அவருக்கு புரியவில்லை. அதன் அர்த்தம் பிலிப்பால் எடுத்துக் கூறப்பட்டபோது, அங்கே ஒரு மனமாற்றம் ஏற்படுகின்றது. எமது வாழ்விலும் இந்த மனமாற்றம் ஏற்படவேண்டும். அதுதான் நாம் இறை வார்த்தையின் படி வாழ்வதன் அடையாளம். எமது நாளாந்த வாழ்வில், எமது குடும்பத்தில், சமுதாயத்தில், வேலை இடங்களில் நாம் மற்றவர்களுடன் பழகும் விதத்தில் அம்மாற்றம் பிரதி பலிக்க வேண்டும். முடியுமா எம்மால்?